DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 254/2022** |
| Deposition of Witness for | : PW 2 |
| Name | : மகாலெட்சுமி |
| **Father's Name** | **:** |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 14.05.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 14 May 2026**.**

**1–வது எதிரி ஆஜர். 2–வது எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது அய்வாய்புலிபட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் சத்துணவு உதவியாளராக பணிபுரிகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன மகேஸ்வரியை எனக்குத் தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. எதிரி கலையரசனையும் தெரியாது. அ.சா.1 ஐ தெரியாது. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**<u>அரசுதரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் போலீசார் விசாரணையில் கடந்த 20.10.2021—ம் தேதி மதியம் 12.00 மணியளவில் குருவிகுளம் — கழுகுமலை ரோட்டில் மினி பேருந்தில் பயணம் செய்தேன் என்றால் சரியல்ல. எப்படி விபத்து ஏற்பட்டது என்று தெரியாது. ஆஜர் எதிரியையோ, கலையரசனையோ, TN 25A 9999 என்ற பதிவெண் கொண்ட மினி பேருந்தில் ஓட்டுநர் மற்றும் நடத்துனராக பணிபுரிந்தார் என்றும், நான் அந்த பேருந்தில் பயணம் செய்தேன் என்றும், ராமலிங்கம் ஊருக்கு மேற்கே ராஜ் தீப்பெட்டி ஆலை அருகே வரும்போது அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டியதாகவும், 2—வது எதிரி கலையரசன் பயணிகளை பாதுகாப்பாக அமர்ந்துள்ளதைக் கவனிக்காமல் வாகனத்தைஓட்டி விபத்தை ஏற்படுத்தினார் என்றும், என்னுடன் பயணித்த மகேஷ்வரி மேற்படி விபத்தினால் காயம் ஏற்பட்டு இறந்துபோனார் என்றும், தற்போது எதிரிகளை வழக்கிலிருந்து விடுதலை செய்வதற்காக அவர்களுக்கு அனுசரனையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.